– சென்னை, மதுரை, திருச்சி, கோவை, சேலம், நெல்லை, வேலூர், கடலூர், ஈரோடு, நாகர்கோவில், தஞ்சை, திண்டுக்கல், பெங்களூர்–புதுச்சேரி நகரங்களில் அச்சாகிறது –

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்





பட அதிபர் எல்.வி.பிரசாத் நூற்றாண்டு விழாவில் முதல்–அமைச்சர் கருணாநிதி கலந்து கொண்டு பேசிய போது எடுத்த படம். மத்திய மந்திரி தாசரி நாராயணராவ், டைரக்டர் கே.பாலசந்தர், நடிகர் கமலஹாசன் மற்றும் எல்.வி.பிரசாத்தின் மகன் ரமேஷ் பிரசாத் ஆகியோர் உடன் இருக்கிறார்கள்.



பட அதிபர் எல்.வி.பிரசாத் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்ட நடிகைகள் சவுகார் ஜானகி, சரோஜா தேவி, அஞ்சலி தேவி ஆகியோர் படத்தில் உள்ளனர்.

# மறைந்த சினிமா அதிபர் எல்.வி. பிரசாத் நூறாவது பிறந்த நாள் விழா

## கருணாநிதி புகழஞ்சலி

சென்னை, ஜன.18–

மறைந்த சினிமா அதிபர் எல்.வி.பிரசாத்தின் நூறாவது பிறந்த நாள் விழாவில் முதல்–அமைச்சர் கருணாநிதி கலந்து கொண்டு அவருக்கு புகழஞ்சலி செலுத்தினார்.

சினிமா இயக்குனர் மற்றும் தயாரிப்பாளருமான மறைந்த எல்.வி.பிரசாத்தின் 100–வது பிறந்த நாள் விழா நேற்று நடந்தது. விழாவுக்கு முதல்–அமைச்சர் கருணாநிதி தலைமை தாங்கி பேசினார். அப்போது அவர் பேசியதாவது:–

### பிரசாத்தின் உபயம்

பிரசாத் மிக மிக மிக என்று சொல்லத்தக்க அளவுக்கு சாமானியராக தன் வாழ்க்கையை தொடங்கி இன்று சரித்திரத்தில் இடம் பெற்றிருக்கிற காலகட்டம் இந்த காலகட்டம். இங்கு மனோகரா படத்தில் இருந்து ஒரு காட்சி காட்டப்பட்டது. சிவாஜி கம்பீரமானாலும், நான் எழுதிய உரையாடலுக்கு கிடைக்க வேண்டிய உத்வேகமானாலும், அது பிரசாத்தின் உபயம் என்றால் அது மிகையாகாது.

அவர் எப்படிப்பட்டவர், தாராள மனப்பான்மை உள்ளவர் என்பதற்கு சரோஜா தேவி ஒரு எடுத்துக்காட்டை கூறினார். ஒரு சினிமாவில் நடிக்க குறிப்பிட்ட தொகையைவிட அதிகமாக 25 ஆயிரம் பணம் அம்மையார் கேட்க, படம் 100 நாள் ஓடினால் தருகிறேன் என்று எல்.வி.பிரசாத் கூறியது போல அந்த படம் 100–வது நாளில் பணத்தை கொடுத்ததாக கூறினார். அதே கதை என் வாழ்க்கையிலும் நடந்திருக்கிறது. எல்.வி.பிரசாத்தின் 3 படங்களுக்கு நான் வசனம் எழுதியிருக்கிறேன். மனோகரா, இருவர் உள்ளம், தாயில்லா பிள்ளை. இங்கே பேசியவர்கள் பெயருக்கு ஏற்பவோ என்னவோ தாயில்லா பிள்ளையை மறந்துவிட்டார்கள். மூன்றுமே பிரமாண்ட வெற்றி பெற்ற படங்களாகும்.

### கூடுதலாக ரூ.10 ஆயிரம்

தாயில்லா பிள்ளை படத்திற்கு நான் கேட்ட தொகை ஒன்று, அவர் தருவதாக சொன்ன தொகை ஒன்று. ஆனால் ஒன்றை உறுதியோடு சொன்னார், 100 நாள் ஓடினால் மேலும் 10 ஆயிரம் ரூபாய் தருகிறேன் என்றார். அந்த படம் 100 நாள் ஓட, 100–வது நாள் அன்று காலை என் வீட்டு வாசலில் ஒரு கார் வந்து நின்றது. பிரசாத் இறங்கி வந்து 10 ஆயிரம் பணத்தை எடுத்துக் கொடுத்து உறுதி மொழியை நிறைவேற்றி விட்டேன் என்றார். நான் ஆச்சரியப்பட்டேன், அதிர்ந்து போனேன். இப்படிப்பட்ட மனிதர்கள் சினிமா உலகில் இருக்கிறார்களா என்று எண்ணி பாராட்டினேன்.

இன்னொரு படத்திற்கு வேறொரு பட அதிபர் அதே போல 100 நாள் ஓடினால் மேலும் ரூ.50 ஆயிரம் தருகிறேன் என்றார். அந்த படத்தை 99–வது நாளோடு நிறுத்தி விட்டார். அவர் பெயரை எல்லாம் சொல்ல விரும்பவில்லை.

### சாதி வேறுபாடற்ற

அவரது உள்ளத்தில் சமுதாய, சமத்துவ கருத்துகள், சாதி வேறுபாடற்ற சமுதாயம் உருவாக வேண்டும் என்ற உன்னதமான எண்ணங்கள் கொண்டவர் என்பதற்கு எடுத்துக் காட்டு தாயில்லா பிள்ளை படம். அந்த படத்தில் தலித் வீட்டு பிள்ளை ஒரு ஐயர் வீட்டில் வளரும். ஐயர் மகன் என்றே அக்ரகாரத்தில் அழைக்கப்படும். அதே போல ஐயர் வீட்டு குழந்தை ஒரு தலித் வீட்டில் வளரும். அது தனது தாய், தந்தையர் தலித் தான் என்றே வளரும். 2 குழந்தைகளும் பெரியவர்களாகி சமுதாய எதிர்ப்புகளை தாங்கிச் செல்வது போல கதை செல்லும். இது தவறு, நல்லதல்ல, படம் ஓடாது என்று கூறப்பட்ட அந்த காலத்தில் துணிந்து புரட்சிகரமான இந்த சமுதாய படத்தை எடுத்த பெருமை மறைந்தும் மறையாத பிரசாத்துக்கு தான் உண்டு.

இவ்வாறு கருணாநிதி பேசினார்.

### இரண்டாந்தர கலைஞர்களாக...

மத்திய நிலக்கரித்துறை மந்திரி தாசரி நாராயணராவ் பேசியதாவது:–

இந்திய சினிமா உலகில் தென்னிந்திய திரைப்படங்களுக்கு பல சிறப்புகள் உண்டு. சரோஜாதேவி, வைஜெயந்தி மாலா, பத்மினி, ரேகா, ஹேமமாலினி, ஸ்ரீதேவி, ஜெயப்பிரதா போன்ற நடிகைகள் மற்றும் பல கலைஞர்கள் இங்கிருந்து தான் அங்கே சென்று இருக்கின்றனர்.

தென்னிந்திய சினிமாவிற்கு மட்டும் தான் உருவாக்கும் திறமை இருக்கிறது. அதனால் தான் தென்னிந்திய மொழி படங்கள் இந்தியில் ரீமேக் ஆகி வருகிறது. ஆனால் அங்குள்ள படங்கள் இங்கே ரீமேக் ஆவதில்லை. அவ்வளவு புகழ்மிக்க தென்னிந்திய கலைஞர்கள் இரண்டாந்தர கலைஞர்களாகத் தான் மதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு உரிய கவுரவும் கிடைக்கவில்லை.

இவ்வாறு அவர் பேசினார்.

### கமலஹாசன்

நடிகர் கமலஹாசன் பேசியதாவது:–

"மனோகரா வசனத்தை பார்த்து தான் நானும் வசனம் பேச கற்றுக்கொண்டேன். என் தந்தை கோபப்பட்டு அடிக்கும் போதெல்லாம் 'என்ன குற்றம் செய்தேன் கொற்றவனே' என்று கேட்பேன். இதை பார்த்தும் என் தந்தை கோபத்தை மறந்து அரவணைப்பார்.

மனோகரா படத்தில் சிவாஜியை இழுத்து வரும் காட்சியை பார்க்கும் போது தமிழ் சினிமாவையே முன்னுக்கு கொண்டு வருவதுபோல் இருந்தது. கலைஞரின் வசனம், சிவாஜியின் குரல், எல்.வி.பிரசாத்தின் இயக்கம் இந்த மூவருடனும் நானும் இருந்திருக்கிறேன் என்பதில் எனக்கு பெருமை.

### சினிமாவை நேசித்தவர்

ஒரு முறை அவருடன் காரில் சென்ற போது ஒரு இடத்தில் காரை நிறுத்தினார். அங்கே ஒரு இடத்தை காட்டி, இங்கே தான் நான் டிக்கெட் கிழித்தேன் என்று கூறினார்.

எல்.வி.பிரசாத் வெகுவாக உடல் நலம் பாதிக்கப்பட்டு இருந்த போது, அவரது மகன் ஒரு வைத்தியம் செய்தார். பிரசாத்தை அப்படியே தூக்கி ஸ்டூடியோவில் கொண்டு வைத்தார். உடனே அவர் எழுந்து உட்கார்ந்து கொண்டார். அந்த அளவுக்கு அவர் சினிமாவை நேசித்தார். அப்படிப்பட்டவரின் நூற்றாண்டு விழாவில் பங்கேற்பதற்கு வாய்ப்பு கிடைத்ததற்கு நான் பெருமையடைகிறேன்".

இவ்வாறு கமலஹாசன் கூறினார்.

### பாலசந்தர்–மணிரத்னம்

இயக்குனர் கே.பாலசந்தர் பேசும் போது, "மாநில மொழி படங்களை எடுத்து வெளியிட்டதில் சிறப்புமிக்கவர் எல்.வி.பிரசாத். காலத்திற்கு தகுந்த முறையில் புதிய தொழில்நுட்பத்தை திரையில் புகுத்தி காட்டியவர். நான் படம் எடுப்பதற்கு முன்னோடியாக இருந்தவர் பிரசாத் தான். அவரது பாணியை நான் பலமுறை பின்பற்றியிருக்கிறேன்" என்றார்.

டைரக்டர் மணிரத்னம் பேசும் போது, "கோடம்பாக்கத்தின் மரியாதை உலக அளவில் உயர செய்தவர் எல்.வி.பிரசாத் என்று

...டைய படங்களை 5 வருடங்கள் கழித்து டி.வி.யில் பார்க்கும் போது ஏதோ பழைய படத்தை பார்ப்பது போல் தோன்றுகிறது. ஆனால் மனோகரா படத்தை பார்க்கும் போது இப்போது எடுத்த படம் மாதிரி இருக்கிறது" என்று கூறினார்.

நடிகைகள் அஞ்சலிதேவி, சரோஜாதேவி, சவுகார் ஜானகி, இந்தி நடிகர் ஜிதேந்திரா ஆகியோர் விழாவில் பேசினர். முன்னதாக எல்.வி.பிரசாத்தின் மகன் ரமேஷ்பிரசாத் வரவேற்றார். கவிதா பிரசாத் நன்றி கூறினார்.